**சார்பு நீதிமன்றம், இலால்குடி.**

OS.No.170 /2018

PW1- சப்பாணி

<u>குறுக்கு விசாரணை</u>

நான் கிளியநல்லூரில் குடியிருந்து வருகிறேன். மேற்படி கிளியநல்லூர் ஆங்கரை கிராமத்தில் இருந்து சுமார் 30 கீ.மீ துரத்தில் இருக்கும். நான் திருமணம் செய்த ஊர் தான் கிளியநல்லூர் ஆகும். மேற்படி கிளியநல்லூரிலேயே நான் நிரந்தரமாக குடியிருந்து வருகிறேன். 1969ம் வருடம் எனக்கு திருமணம் ஆனது. எனக்கு நான்கு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண் குழந்தைகளும் உள்ளார்கள். என்னுடைய குழந்தைகள் அனைவரும் மேற்படி கிளியநல்லூரில் பிறந்து அங்கேயே படித்து வந்தார்கள் என்று சொன்னால் சரிதான். நான் ரயில்வேயில் பணிபுரிந்து வருகிறேன். நான் இந்த வழக்கில் ஒரு சொத்தை தான் காண்பித்துள்ளேன். அந்த சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. 2ம் பிரதிவாதி தங்கமணி தாவா வழக்கில் என்ன கட்சி செய்து வருகிறார் என்று எனக்கு தெரியாது. எனது மனைவி பெயர் தங்கபொண்ணு. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் நான் கையெழுத்து எதுவும் செய்யவில்லை. அந்த ஆவணத்தில் உள்ள முதல் கையெழுத்து சப்பாணி என்று கண்டுள்ளது. இரண்டாவது கையெழுத்து தங்கபொண்ணு என்று கண்டுள்ளது. 09.12.1989ம் தேதியில் நான் என்னுடைய பங்குக்காக 2ம் பிரதிவாதி தங்கமணியிடமிருந்து கிரயத் தொகை ரூபாய் 5000-த்தை பெற்றுக்கொண்டு கிரயப்பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணத்தில் கண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள சாட்சிகளான மனோகரன், சப்பாணி மற்றும் மாணிக்கம் ஆகியோர்களுடன் எனக்கு விரோதம் எதுவும் இல்லை. மேற்படி 09.12.1989ம் தேதிய கிரயப்பத்திரம் குறித்து மறுப்பு தெரிவித்து நான் பதில் வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. 09.12.1989ம் தேதிய கிரயப்பத்திரத்தில் கண்டுள்ளது போன்ற சொத்து உள்ளதா என்று கேட்டால் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்களின் நான்குமால் எல்லைவிவரம் எனக்கு தெரியாது. அந்த சொத்தின் பழைய சர்வே எண் மற்றும் புதிய சர்வே எண் குறித்தும் எனக்கு தெரியாது. தாவா சொத்துக்கு எனது தகப்பனார் பெயரில்தான் பட்டா ஏற்பட்டு உள்ளது. அந்த பட்டாவை வாங்கி நான் இந்த

வழக்கில் தாக்கல் செய்யவில்லை. பட்டா வாங்கி தாக்கல் செய்ய வேண்டும் என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்மந்தமாக ஆங்கரை கிராம நிர்வாக அலுவலரையோ பட்டா கேட்டு இலால்குடி வட்டாட்சியரையோ நான் அனுகவில்லை. என்னிடம் காட்டப்படும் நத்தம் தூய அடங்கல் பதிவேட்டில் ராமன் மற்றும் தங்கமணி ஆகியோர்களின் பெயர்கள் தவறுதலாக ஏற்பட்டுவிட்டது. அவ்வாறு தவறுதலாக ராமன் மற்றும் தங்கமணி பெயர்கள் பதிவு ஏற்பட்டுவிட்டதாக நாளது தேதிவரை வருவாய் துறையில் நான் மனு எதுவும் கொடுக்கவில்லை. பதிவு ஏற்பட்டது தெரியாது என்பதால் நான் மனு கொடுக்கவில்லை. பிரதிவாதிகள் எதிர்வழக்குரை தாக்கல் செய்த பிறகும் வருவாய் துறையில் மேற்படி ஆவணங்கள் குறித்து நான் எதுவும் பார்க்கவில்லை. வழக்கு முன்பும் வழக்கு சமயத்திலும் நான் அவ்வாறு பட்டாவில் பெயர் மாறியிருப்பது குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது பெயர் துலங்கவில்லை. மேற்படி ஆவணங்களை நான் பெற்ற போது அதில் ராமன் மற்றும் தங்கமணி ஆகியோர் பெயர்கள் இடம்பெற்றிருந்த போதிலும் அந்த நடவடிக்கை எதிராக நான் மேல்முறையீடு எதுவும் செய்து கொள்ளவில்லை. 09.12.1989 தேதியில் நான் ரூபாய் 5000-த்திற்கு தாவா சொத்து சம்மந்தமாக 2ம் பிரதிவாதி பெயருக்கு ஒரு கிரயப் பத்திரம் எழுதிக்கொடுத்துவிட்டேன் என்று சொன்னாலும் அதன் காரணமாகவே தாவா சொத்திற்குரிய பட்டா ஆவணத்தில் பிரதிவாதிகள் பெயர் இடம்பெற்றிருந்த போதிலும் நான் மேல்முறையீடு எதுவும் செய்துகொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழை 15.07.2013 தேதியில் நான் பெற்றுள்ளேன். வா.சா.ஆ.4 வில்லங்க சான்றிதழை 01.01.1987 முதல் 12.07.2013 தேதி வரையில் தான் பெற்றுள்ளேனா என்று கேட்டால் அதுபற்றி எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. குறிப்பிட்டு 12.07.2013ம் தேதி வரையில் வில்லங்க சான்றிதழ் பெற வேண்டிய அவசியம் என்னவென்று கேட்டால் அதுபற்றி எனக்கு தெரியாது. 18.07.2013ம் தேதியில் 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் 2ம் பிரதிவாதிக்குரிய பங்கை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் எழுதிக்கொடுத்ததை தெரிந்து கொண்டு அந்த ஆவணத்தை மறைக்கும் விதமாக தான் 12.07.2013 தேதி வரையில் நான் வில்லங்க சான்றிதழ் பெற்றிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு மேற்கண்ட செட்டில்மெண்ட் ஆவணம்

குறித்து 2ம் பிரதிவாதி அவருடைய எதிர்வழக்குரையில் குறிப்பிட்டிருந்த போதிலும் அதை மறுக்கும் விதமாக நான் பதில் வழக்குரை எதுவும் தாக்கல் செய்யவில்லை. அதைபோல் 18.07.2013 தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொன்னால் அதுபற்றியும் எனக்கு தெரியாது. மேற்படி சங்கதிகள் அனைத்தையும் நான் தெரிந்து கொண்டு தற்போது வேண்டுமென்றே தெரியாது என்று பதில் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 09.12.1989ம் தேதியில் நானும் எனது மனைவியும் சேர்ந்து தாவா சொத்துக்களில் உள்ள எனது பாகத்தை பொறுத்து 2ம் பிரதிவாதிக்கு கிரயப் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளதால் அந்த சொத்துக்களில் தற்போது எனக்கு பாகம் எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. 2013ம் வருடத்திய செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி 1ம் பிரதிவாதிக்கு சொத்து முழுவதும் பாத்தியப்பட்டுள்ளது என்று சொன்னாலும் சரியல்ல. அதனால் நான் வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னாலும் சரியல்ல. நான் வேலை பார்க்கும் அலுவலக ஆவணங்களில் உள்ள விவரங்களை என்னிடம் படித்து காண்பித்த பிறகுதான் நான் கையெழுத்து செய்வேன். என் மனைவிக்கு தமிழ் எழுத படிக்க தெரியாது. எனது மனைவி கையெழுத்து செய்வார். தாவா வழக்கில் எனது மனைவியை சாட்சியாக விசாரிக்கவில்லை. எனது மனைவியை சாட்சியாக விசாரித்தால் 1989 கிரயப்பத்திரம் மற்றும் 2013 செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி தெரிந்து விடும் என்பதால் தான் அவரை சாட்சியாக விசாரிக்க முன்வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.